LIBRARY
6 - JUL 1963
STATE LEGISLATURE, MADRAS

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 4th March 1963.**

---

The House met in the Assembly chamber, Fort St. George, Madras at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTION.

MR. SPEAKER: Starred questions 113—115,, 119 and 120 relating to public health and medicine are postponed.

### அரசாங்கப் போக்குவரத்து (சென்னை)

**116 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) சென்னையில் ஓடக்கூடிய பஸ்களின் எண்ணிக்கை என்ன ?*

*(இ) Break down பஸ்கள் சராசரி எவ்வளவு ?*

*(உ) அரசாங்க பஸ் ஸ்தாபனத்தில் எத்தனை கெஜட் பதிவுள்ள அதிகாரிகள் உள்ளனர் ?*

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Total number of buses in actual operation on 22nd January 1963 is 572. (527 schedules and 45 spares.)

(b) Average number of breakdown per day during January 1963 (up to 22—1—1963) is 48.

(c) 32.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நம்முடைய சென்னை நகரத்தில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும், பூரணமாக இன்கம்-டாக்ஸ் கொடுக்காமல் இருந்தும், 5 லட்சம் சொச்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதிகமான சிப்பந்திகளை வைத்திருப்பதினுல்தான் இந்த நஷ்டம் ஏற்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்ற வருஷம் நஷ்டம் ஏற்படவில்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இந்தப் புள்ளி விவரம் எங்கிருந்து கிடைத்திருக்கிறது என்று தெரியவில்லை. இனிமேல் வருகின்ற நேஷனலிஸ்ட் டிரான்ஸ்போர்ட் மான்யக் கோரிக்கை விவாதத்தில் இந்தக் கணக்குகளை எல்லாம் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. தங்கவேலு : ஸார், பிரேக்டவுனில் நிற்கும் தனியார் பஸ்களில் ஏற்படும் செலவு குறைவாகவும், அரசாங்க பஸ்களில் ஏற்படும் செலவு கூடுதலாகவும் இருப்பதாகத் தெரிகிறது. இதைப் பற்றி அரசாங்கம் கவனித்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் செலவு செய்வதைப்பற்றி வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும். தனியார் செலவு செய்கின்ற விவரங்கள் சர்க்காருக்குச் சரியாகக் கிடைக்காது. சர்க்கார் செலவு செய்கின்ற புள்ளிவிவரங்களை மேஜைமீது வைக்கின்ற நேரத்தில் அதையும் தனியார் செலவு செய்கின்றதையும் பார்த்து எது கூடுதல் எது குறைவு என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், சபை முன் வைக்கப்பட்டுள்ள 1962-63 ஆண்டு விவரங்களைப் பார்க்கும்போது வருமானம் 3 கோடி 40 லட்சம் ரூபாய் என்றும், வொர்க்கிங் எக்ஸ்பென்ஸஸ் என்ற இனத்தில் 3 கோடி 46 லட்சம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி பார்க்கும்போது வருமானத்தில் 5 லட்சம் 86 ஆயிரம் குறைவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் முன்பு சொன்னதைத் தான் இப்போதும் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது. சர்க்கார் பஸ்கள் நஷ்டத்தில் ஓடவில்லை. தனியார் நடத்தும் பஸ் போக்குவரத்தில் ஏற்படுகின்ற லாப நஷ்டக் கணக்குகள் நமக்குச் சரியாகக் கிடைப்பதில்லை. இப்போதுள்ள கேள்வி பிரேக்டவுன் பற்றியது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், இந்த பிரேக்டவுன் ஆகும் பஸ்களில் சென்ற ஆண்டு நடந்த மறியல் போராட்டத்தின் காரணமாக சேதமடைந்த பஸ்களும் அடங்கியிருக்கின்றதா, அப்படியென்றால் எத்தனை பஸ்கள் அடங்கியிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு பிரேக்டவுன் என்றால் என்ன அர்த்தம் என்பது புரியவில்லை என்று நினைக்கிறேன். அதாவது ஒரு பஸ் 30 நிமிட நேரம் மெக்கானிக் கோளாறினால் ஓடாமல் நின்று விட்டால் அதை பிரேக்டவுன் என்று நாங்கள் கணக்கெடுத்து வருகின்றோம். 30 நிமிட நேரம் நின்று 31-வது நிமிடத்தில் பழுது பார்த்து ஓட ஆரம்பித்து விட்டாலும், பிரேக்டவுன் என்றுதான் கணக்கு வைத்துக் கொள்ள முடியும். இப்படி பிரேக்டவுன் ஆகி ஓடாமல் நின்ற பஸ்களின் விவரங்களைப்பற்றிதான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : சர்க்கார் பஸ் ஓட்டுகின்றவர்கள் சட்ட வரம்புகளையும் மீறி, மிக வேகமாக சென்னை நகரத்தில் ஓட்டிக் கொண்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

4th March 1963]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்காருக்குத் தெரியாது. பஸ்கள் வேகமாக ஓடவில்லை என்கிற புகார் வந்து கொண்டிருப்பது தெரியும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சில நேரங்களில் சில பஸ் ஸ்டாப்களில் க்யூ நிற்பது அடுத்த ஸ்டாப் வரை இருக்கிறது. இதைக் குறைப்பதற்குச் சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த மாதிரி க்யூ நிற்கவில்லை.

**திரு. கே. மூக்கையா தேவர் :** ஸார் தனியார் துறையில் ஓடுகின்ற ஒவ்வொரு பஸ்ஸையும் எடுத்துப்பார்த்தால் இரண்டு, மூன்று வருடங்களுக்குமேல் வைத்திருக்காமல் வேறு புதிய பஸ்களை வாங்கி மாற்றி ஓட்டி வருகிறார்கள். அதே முறையில் அரசாங்கத் துறையில் அதிகம் செலவு செய்து பழுது பார்ப்பதற்குப் பதிலாகப் புதிய பஸ்களை வாங்கிப் போட்டு லாபகரமாக நடத்துவதற்கு அரசாங்கம் தனியார் பஸ்காரர்கள் கையாளும் கொள்கையைப் பின்பற்றுவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனியார் துறையில் இன்கம்டாக்ஸ்ஸைக் குறைவாகக் கட்டுவதற்காக அடிக்கடி பஸ்களை புதியதாக வாங்கி மாற்றி வருகிறார்கள். சர்க்கார் துறையில் அப்படிச் செய்தால் அது தேசத்திற்கே நஷ்டம். நம்முடைய பஸ்களை நல்ல முறையில் எவ்வளவு நாட்கள் ஓட்ட முடியுமோ அந்த அளவுக்கு ஓட்டினால்தான் நஷ்டம் இல்லாமல் பார்த்துக்கொள்ள முடியும். ஆகவே இவ் விஷயத்தில் தனியார் துறையில் கைப்பற்றுகின்ற கொள்கையைச் சர்க்கார் பரிபூரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

**திரு. மு. கருணாநிதி :** வேலை முடிகிற நேரத்தில் பஸ் ஓட்டுகின்றவர்கள் வழியில் நிற்கும் பிரயாணிகளைக்கூட ஏற்றிக் கொள்ளாமல், கால் மணி, அரை மணி நேரம் இருந்தாலும்கூட முன்னதாகவே ஓட்டிச் சென்றுவிடுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தெரியும், சாதாரணமாக இப்போது சர்க்கார் பஸ் போக்குவரத்தில், சென்னை நகரத்தில், லிமிடட் ஸ்டாப் சர்வீஸ் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன்படி ஓடுகின்ற சில பஸ்கள் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும்தான் நிற்கும். இதைப் புரிந்து கொள்ளாமல் பஸ் ஸ்டாப்பில் நிற்காமல் ஓட்டிவிடுகிறார்கள் என்று புகார் செய்கிறார்கள்.

*Municipal bus-stands (Coimbatore district)*

* 117 Q.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state the names of the Municipal Town in Coimbatore district—

(i) with Municipal bus-stands ; and

(ii) without Municipal bus-stands?